பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 4.00

சுடர்: 5 பிரமோதூத வூ கார்த்திகை மீ 01 உ சனிக்கிழமை (17 11 1990) ஹிஜ்ரி 1410 ற ஆகிர் 7 கதிர் 255

# நம்பிக்கை வாக்கெடுப்பில் சந்திரசேகர் வென்றார்!

## இரண்டு பேர் அமைச்சரவைக்கு 269பேர் ஆதரவு; 204 பேர் எதிர்ப்பு

புதுடில்லி, நவம்பர் 17

இந்தியப் பிரதமர் எஸ். சந்திரசேகர், துணைப்பிரதமர் தேவிலால் ஆகிய இருவரை மட்டும் கொண்ட அமைச்சரவை மீது, நம்பிக்கையைத் தெரிவிக்கும் பிரேரணை, இந்திய நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேறியது.

ஆதரவாக 269 உறுப்பினர்களும், எதிர்த்து 204 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

வாக்களிப்பின் போது பிரசன்னமாகவிருந்த 488 உறுப்பினர்களில் 15பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

பிரதமர் சந்திரசேகரின் அரசு மீதான ஒரு வரி நம்பிக்கைப் பிரேரணை நேற்றுக் காலை நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதமரும் துணைப் பிரதமரும் மட்டுமே உள்ள அமைச்சரவை சட்டத்திற்கு முரணானது என்றும்—

ஆகவே நம்பிக்கைத் தீர்மானம் செல்லாது என்றும் ஜனதா தள் (சிங்) கட்சி ஆட்சேபனை கிளப்பியது.

நம்பிக்கைத் தீர்மானம் வெற்றியீட்டிய பின்னர் அமைச்சரவை விஸ்தரிக்கப்படும் என்று பிரதமர் சந்திரசேகர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, சபாநாயகர் ரபிரோய், ஆட்சேபனையை நிராகரித்தார்.

பின்னர் பிரேரணையை பிரதமர் முன்மொழிந்து பேசி

[6ஆம் பக்கம் பார்க்க]

## மந்திரிகள் விவரம் இன்று

புதுடில்லி,, நவ. 17

தனது அமைச்சரவையை சந்திரசேகர் இன்று விஸ்தரிப்பார் என்றும்-

புதிய அமைச்சர்கள் பற்றிய விவரம் இன்று வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது

பதவியேற்பு குறித்தும் மாலையில் தகவல் வெளியாகும் என்று சொல்லப்பட்டது (உ)

## நோயாளர் அடுத்த வாரம் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம், நவ. 17

கொழும்பில் சிகிச்சை பெற வேண்டிய அவசர நோயாளர்களின் இரண்டாம் தொகுதியினர், அடுத்த வாரம் கப்பல் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் பருத்தித்துறையில் நங்கூரமிட்டுள்ள 'குமண' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்ட பின்னர் அதில் நோயாளர்கள் அழைத்துச் செல்லப்படுவர். (ஒ-3-5)

## ஆஸ்பத்திரிக்கு டீசல் வந்தது

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். ஆஸ்பத்திரிக்கு நேற்று கப்பல் மூலம் டீசல் வந்து சேர்ந்தது.

ஆஸ்பத்திரி ஜெனரேட்டர்களை இயக்குவதற்கு கடந்த சில தினங்களாக போதுமான அளவு டீசல் இல்லாதிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ-3-5)

## நிர்வாக சேவை பரீட்சை

கொழும்பு, நவ. 17

வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாக சேவைக்கு ஆட்திரட்டுவதற்காக இலங்கை நிர்வாக சேவை இரண்டாம் வகுப்பு இரண்டாம் தரப் பரீட்சைகள் இம்மாதம் 24, 25 ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## பருத்தித்துறை இறங்குதுறை விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ 17

பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து கூடுதல் பொருள்களை இறக்க வசதியாக இறங்குதுறை புனரமைக்கப்பட இருக்கின்றது.

கப்பல்களில் இருந்து விரைவாக பொருள்களை இறக்க வசதியாக இறங்குதுறை புனரமைக்கப்பட வேண்டும். இவ்வாறு கொழும்பில் இருந்து வந்த கப்பல்துறை நிபுணரும், கப்பல்கூட்டுத்தாபன அதிகாரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் தாக்குதல்

புல்மோட்டை இராணுவ முகாமிலிருந்து கடந்த புதன்று காலையிலும் பின்னர் நண்பகலிலும் வெளியேறிய இராணுவத்தினரை அணைக்கட்டுப பாலத்தடியில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்கி, முகாமுக்கு பின்வாங்கச் செய்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் ஒவ்வொன்றின்போதும் படையினர் காயமுற்ற சிப்பாய்களைத் தூக்கிக்கொண்டு முகாமுக்கு பின்வாங்கி ஓடியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## காங்கேசன் அதிகாரிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

காங்கேசன்துறை சிமெந்து ஆலைகள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்த அவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் அவசரமாகக் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து நிறுவனம் ஆகிய சிமெந்துத் தொழிற்சாலைகளில் படையினர் நிலை கொண்டிருப்பது தெரிந்ததே.

இந்த ஆலைகளின் எதிர்காலம் குறித்து பேச்சு நடத்தவே அவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் அவசரமாக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## நகரில் மீண்டும் நடைபாதை கடைகள்

யாழ்ப்பாணம், நவ 17

யாழ் நகரப் பகுதியில் கடைகள் பலவும் இப்போது திறக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில், நடைபாதைக் கடைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மக்கள் நடமாட்டமும் தினமும் அதிகரித்து வருகிறது. (ஒ-3)

## திரியாய் வித்தியாலயத்தில் மீண்டும் ராணுவ முகாம்!

யாழ்ப்பாணம், நவ.17

கடந்த வியாழனன்று திரியாயில் காட்டு வழியாக முன்னேறி வந்த படையினர், திரியாய் மகாவித்தியாலயத்தில் மீண்டும் முகாம் ஒன்றை அமைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் - அரச படைகள் மோதல்கள் ஆரம்பித்த காலத்தில் இந்த பாடசாலைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதும்-

அதனை அடுத்து இராணுவத்தினர் முகாமை விட்டு ஓடியதும் தெரிந்தவையே. (உ)

## ‘குமண’வில் 3,100 மெ.தொன் பொருள்கள்!

யாழ்ப்பாணம், நவ. 17

நேற்றுப் பகல் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'குமண' கப்பலில் 3ஆயிரத்து 100 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்றே ஆரம்பமாகி விட்டன. (ஒ 3-5)

## விடத்தற்பளை பகுதியில் நேற்றும் ஹெலித் தாக்குதல்

தென்மராட்சி, நவ. 17

நேற்றுப் பகல் ஒரு மணியளவில் விடத்தற்பளையிலும் மந்துவிலிலும் ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்விரு இடங்களிலுமுள்ள ப.நோ.கூ. சங்க கிளைகளில் உணவுப் பொருள்களைப் பெறுவதற்குக் காத்து நின்ற பொது மக்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் பெரிதாக சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை —

நேற்று மாலை விடத்தற்பளை அம்மன் கோவிலுக்குப் பக்கத்தில் நின்ற டிராக்டர் மீதும் ஹெலியிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த சில தினங்களாக இப்பகுதிகளில் ஹெலித் தாக்குதல் வழமையான நிகழ்ச்சியாக மாறி வருகிறது (ஒ-117)

## தனியாருக்கு மருந்து

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் வைத்தியசாலைகள், பார்மசிகள் ஆகியவற்றுக்குத் தேவைப்படும் மருந்து வகைகளை கொழும்பில் இருந்து எடுத்து வந்து கொடுப்பதற்குச் செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தேவைப்படும் மருந்து வகைகளின் விவரங்களை நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்டவர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-3)

## டயர் போட்டு எரிப்பு

யாழ்ப்பாணம், நவ 17

மட்டக்களப்பு நகரையும் புளியந்தீவையும் இணைக்கும் புதுப்பாலத்தடிப் பகுதியில் கடந்த வியாழனன்று இரு வெளிமாவட்ட தமிழர்களை படையினர் டயர் போட்டு எரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## தென்மராட்சிப் பகுதியில் ஒரு மாத காலத்தில் 151 பேருக்கு நாய்க்கடி!

தென்மராட்சி, நவ. 17

தென்மராட்சிப் பகுதியில் ஒரு மாத காலத்தில் 151 பேர் நாய்க்கடிக்கு இலக்காகி உள்ளனர்.

கடந்த அக்டோபர் [illegible] திகதி முதல் இம்மாதம் [நவம்பர்] 15ஆம் திகதிவரை நாய்க்கடிக்கு இலக்கான 151 பேர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 26 பேர் விசர் [illegible] என்றும் இதனால் 4 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது. (ஒ-117)

## வயாவிளானில் வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 17

நேற்று நண்பகல் வயாவிளான் பகுதியில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி யாழ ஈழம் (மகாலிங்கம் சுகந்தன்-ஏழாலை) என்பவர் வீரமரணமடைந்தார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேசன் (பெண்) நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. ஊசி நீக்கியது. தொடர்பு: பொ. தில்லைநாதன் 3 ஆம் கட்டை பருத்தித்துறை வீதி கல்வியன் காடு (Organ Classes) எதிர் வீடு. (14778)

தத்தாரி, புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், இல்லைறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட சலுகையுண்டு) "மண்டேலா ரேடர்ஸ்" இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [14550]

### அண்ணா கோப்பி

மீண்டும் மேற்படி ஸ்தாபனம் இல 4 நவீன சந்தையில் 13-11-90 முதல் இயங்கு கிறதென்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம். அண்ணா கோப்பி தயாரிப்புகளை பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள் (சி/5416)

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் இணை: பிரதான வீதி, மானிப்பாய். (C/5398)

### வழமையான சேவை

மூன்று மொழிகளிலும் றபர் ஸீல், பிளாஸ்டிக் போட், விளம்பர போட் யாவும் செய்து கொள்ள "வீமா" 104, ஆஸ்பத்திரி சந்தி, யாழ்ப்பாணம் தினசரி காலை 9 மணி முதல் பி. ப. 1.00 மணிவரை சேவை செய்கின்றது. [14754]

### தவறிவிட்டது

பஞ்சலிங்கம் பாஸ்கரன் பாஸ்போட் இல. H 0340888 ஓமந்தைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து கொக்குவில் கொக்குவில் (சேச் லேன்) கிழக்குஎன்ற முகவரிக்கு ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (14298)

### கல்வி

G C E (O/L) ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் தொடர் வகுப்புக்கள் மூலம் குறைந்த காலத்தில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். மற்றும் பாலர் வகுப்பில் இருந்து A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். எனது வீட்டிலும் தனிப்பட்ட வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆறுமுகத்தான் 10, சச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி, [14751]

### டவர் வோச் வேக்

மேற்படிஸ்தாபனம் பழைய இடத்தில் (யுபிலிபசார், யாழ் நகர்) இயங்குகின்றது என பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதுடன் திருத்துவதற்கென ஒப்படைத்த கடிகாரங்களை 30ம் திகதிக்குள் பெற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம் சகல வித கடிகார பற்றறிகளும் உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. (14783)


## சுத்திகரிப்பு

குருநகர், நவ. 17

வடிகால்களைச் சுத்திகரிக்கும் வேலைகள் யாழ் - மாநகரசபை சுகாதாரப் பிரிவால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.


# தேவை

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயம்

★ குருக்கள்

★ உதவி ஐயர்

மேற்குறித்த ஆலயத்திற்கு குருக்களும் உதவி ஐயரும் தேவை. உதவி ஐயா மடப்பள்ளி வேலைகளைச் செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும் மாதாந்த வேதனம் வழங்கப்படும். இருப்பிட வசதி உண்டு.

பெயர், முகவரி, வயது, எதிர்பார்க்கும் வேதனம், முன் அனுபவம் என்பவற்றைக் குறிப்பிட்டு இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு 25 - 11 - 90க்கு முன் விண்ணப்பிக்கவும்.

— பரிபாலன சபை.

திரு. ப. முத்துக்குமாரசாமி
பரிபாலனசபைத் தலைவர்
50. விபுலானந்தர் வீதி, யாழ்ப்பாணம். [14776]

# C. C. A.

[வெலிங்டன் சந்திக்கு அருகாமை]
மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தகம்

90, 91, 92

நடைபெறுகின்றன

புதியபிரிவு ஆரம்பம் -

சனி 17 - 11 - 90, 8.00 மணி

## A/L 90 Day Class

ஆரம்பம் 21 - 11 - 90

[வழமையான ஆசிரியர்குழு] [...]

# UNIVERSITY OF JAFFNA

Applications will be received by me from suitable candidates for the following post upto 21st November, 1990.

POST:-

## Casual Nurse

Salary:-

Rs 83.40 Cts. + Other allowances payable by the University.

Qualifications:-

1 G C E (O/L) Examination in six subjects at not more than two sittings with credit passes in three Subjects.

2 Certificate of Competenance as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

Age:-

Not more than 40 Years.

NOTE:-

Contract appointments will be considered

Applicants are requested to apply together with their Bio-datas. Qualified applicants are also requested to present for an Interview scheduled to be held on 23rd November, 1990 at 10.00 a m in the Board Room of this University.

— REGISTRAR.

University Of Jaffna,
Thirunelvely,
Jaffna
1990 - 11 - 14.
[C-5428]

விவசாயபீடம்
கிளிநொச்சி
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

விவசாய பீட முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் 1990 டிசம்பர் 3 ஆம் திகதி திங்கட் கிழமை கிளிநொச்சியில் ஆரம்பமாகும். முதலாம் ஆண்டு மாணவர்கள் அனைவரும் 1990 டிசம்பர் 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சியில் உள்ள விவசாய சேவைக் காலப் பயிற்சி நிலையத்தில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

துணைவேந்தர்.

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
15-11-90.
(இ/5433)


# ஊர்காவற்றுறைப் பகுதியில் 300 வீடுகள் பலத்த சேதம்

ஊர்காவற்றுறையில் நிலை கொண்டு இருக்கும் இராணுவம் தனது முகாமை சுற்றியுள்ள பகுதிகளை அண்டிய வீடுகளை தகர்ப்பதுடன் தீயிட்டு கொளுத்தியும் வருகின்றது.

சரம்பன், ஆஸ்பத்திரிக்குப் பின்புறம் ஆகிய பகுதிகள் உட்பட பல இடங்களில் இது வரை சுமார் 300 வீடுகள் சேதப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. வீடுகளை நாசமாக்கும்போது படையினர் அயல் பகுதிகள் மீது ஷெல் தாக்குதல் நடத்துகின்றனர். (இ-125)


# ஒப்பு நோக்குநர்

ஆகக்குறைந்தது மூன்று வருட முன் அனுபவம் உள்ள ஒப்புநோக்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பத்திரிகை அலுவலகங்களில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை தரப்படும். தமிழில் தேர்ச்சியும், ஆங்கில அறிவும் அத்தியாவசியம். யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் மிகவும் விரும்பப் படுவர்.

தெரிவாகும் விண்ணப்பதாரர், மாற்றுக்கடமையில், இரவிலும் பணிபுரியுமாறு கேட்கப்படுவார். அனுபவம், திறமைக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

கல்வி, தொழில்—தகைமைச்சான்றிதழ்களின் பிரதிகளுடன் 20-11-1990க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

விலங்கியல்

R. ஈஸ்வரதாசன் B. Sc (Cey)

## G. C. E. A/L: 90, 91, 92 ஆண்டுகள்

Personal Classes
B. M. C. Front Lane, Jaffna.
21, மணல் தரைலேன், கந்தர்மடம்.

ஆகிய இடங்களில் கல்வி கற்ற சகல மாணவர்களும் புதிதாக சேரவிரும்பும் மாணவர்களும்.

21, மணல்தரை லேன்,
கந்தர்மடம் - யாழ்ப்பாணம் இல்

சனி, ஞாயிறு 17, 18 - 11 - 90 3.30 p.m. இற்கு பின் நேரில் சந்தித்து நேர அட்டவணையை பெற்றுக் கொள்ளவும்.

G. C. E A/L-90 August நடைபெற்ற Question paper பெற்றுக்கொள்ளலாம்.

(14779)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 17 | 08 | 1916



மறைவு: 18 | 10 | 1990

திருமதி

## அன்னம்மா சிவகுருநாதன்

அம்மா நீங்கள் வாழ்ந்த நாட்களில்
அன்பும் பரிவும் அணைக்க வாழ்ந்தோம்
இம் மாநிலத்தில் காலங்களெல்லாம்
இருக்கும் உங்கள் இதயத்து நினைவு:

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"அன்ன விலா"
உரும்பராய் வடக்கு,
உரும்பராய். [14777]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஓர் உண்மையும் 10 பொய்களும்

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியின் பாதுகாப்புப் பகுதிக்குள் விமானத் தாக்குதல் நடந்து ஒரு வாரத்துக்கும் மேலாகி விட்டது. அந்தத் தாக்குதல் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு கண்டன அறிக்கை வெளியிட்டதும், பல செய்தி ஏஜன்சிகள் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசித்தப்படுத்தியதும் பழைய சங்கதிகள்.

சம்பவம் நடந்த நேரத்தில் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் அங்கு நின்றதால், அதற்குச் சாட்சியாக நின்று உண்மை நிலையை உலகுக்கு எடுத்துச் சொல்லக் கூடியதாக இருந்தது, ஆனால் தமது ஒப்பந்த மீறலை ஒப்புக்கொள்ள மனம் இசையாத அரசாங்கம், வழமையான பாணியில், தான் தவறு விடவில்லை என்று நிலைநாட்ட முனைகிறது.

சம்பவம் நடந்தன்று பி.பி.சி செய்தியாளருக்குத் தவறுதலாக, தெரியாத்தனமாக நடந்து விட்டது என்று கூறிய, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ரணதுங்காவே வியாழக்கிழமை நடந்தசெய்தியாளர் மாநாட்டில் ஆஸ்பத்திரிப் பகுதியில் குண்டு வீசப்படவில்லை என்று மறுத்திருக்கிறார்!

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிப் பகுதி பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது பற்றி விமானப் படையினர் அறிந்திருக்காததால், தப்பிதம் நடந்து விட்டது என்று பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியதாக அரசாங்கப் பத்திரிகையான 'டெயிலி நியூஸ்' முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த முரண்பட்ட தகவல்களும், நேரத்துக்கு நேரம், ஆளுக்கு ஆள் வெவ்வேறு காரணங்களும் கூறப்படுவதன் அர்த்தம் என்ன? ஓர் உண்மையை மறைப்பதற்காக ஒரு பெரிய பொய்யைக் கூறி, அதனைச் சரியாக்க மேலும் ஒன்பது பொய்கள் கூறப்படுகின்றன என்பதல்லாமல் வேறல்ல!

ஆஸ்பத்திரி மீளத் தொடங்கும் நாளில் வேண்டுமென்றே வம்புக்கு குண்டு வீசப்பட்டது என்பதுதான் உண்மை. தவறுதலாக நடந்தது என்று கூறியாவது தமது குற்றத்தை ஒப்புககொண்டால் ஓரளவுக்கேனும் பரவாயில்லை.

ஆனால் பச்சைப் பொய்யைச் சொல்லி, தவறுவிடும் தமது அதிகாரிகளை மேலும் குற்றம் செய்யத் தூண்டுகிறது அரசு. தாங்கள் புரியும் குற்றங்களை தட்டிக் கேட்பதற்குப் பதிலாக அவற்றை மறைத்துத் தட்டிக் கொடுக்க உயர் அதிகாரிகளும், அரசினரும் இருக்கிறார்கள் என்ற மமதையில் அரசபடையினர் எதையும் எப்படியும் செய்ய அனுமதிக்கப்படுகிறது. தமிழர்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் எல்லாவற்றிலுமே இந்த நடைமுறை தான பழக்கத்தில் இருந்து வருகிறது. இது எப்போதாவது ஒழியுமா?

# கிளிநொச்சியில் பங்கீட்டு முறையில் விவசாயிகளுக்கு உரம்

யாழ்ப்பாணம், நவ. 17

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கொண்டுவரப்பட்ட 70 தொன் உர வகைகள் பங்கீட்டு அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

10 லொறிகளில் கொழும்பில் இருந்து திங்கட்கிழமை கொண்டுவரப்பட்ட அமோனியம் உரவகை உடனடியாகவே ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் ஒருவருக்கு மூன்று அந்தர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதியுடன் உரக் கூட்டுத்தாபனத்தில் கொள்வனவு செய்யப்பட்டு இந்த உரவகை கொண்டு வரப்பட்டது. (இ-3)

## கோப்பாயில்

கோப்பாய், நவ. 17

கோப்பாய் சந்தியில் விழும் நிலையில் இருந்த அரச மரம் கோப்பாய் மத்தி சிற்றூரவையினரின் முயற்சியினால் தறிக்கப்பட்டது. (இ-72)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு

# நிரந்தர நியமனம் வழங்க நேர்முகப் பரீட்சை நடக்கும்

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் விரைவில் நடைபெற இருக்கின்றன.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் ஆரம்பத் தெரிவுப் பட்டியல் கடந்த வாரம் இங்கு அனுப்பப்பட்டிருந்தது தெரிந்ததே.

அந்தப் பட்டிலியல் இடம் பெற்றிருக்கும் விண்ணப்பதாரர்களின் சுய விவரங்களை, பாடசாலை அதிபர்கள் மூலம், அடுத்த வாரத்தில் இருந்து சேகரிக்க இருப்பதாக யாழ். கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து நேர்முகப் பரீட்சைகள் யாழ். கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்றும்—

அதன் பின்னர் பட்டியல் ஒன்று கொழும்புக்கு அனுப்பப்படும். அதன் பின்னர் அங்கிருந்து நியமனக் கடிதங்கள் இங்கு அனுப்பிவைக்கப் படும் — என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார். (ஒ - 3)

# மின்சார சபைக்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை

மாங்குளம் இராணுவ முகாம் அருகே சேதமடைந்த மின்கோபுரம், மற்றும் கேபிள்களைத் திருத்தும் வேலைகளை ஆரம்பிக்க முடியவில்லை என்று மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கான அனுமதி கூட்டுப் படைத் தலைமையகத்திடம் இருந்து நேற்று வரை கிடைக்கவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே வேளை —

கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் இந்த திருத்த வேலைகளை மேற்கொள்ள கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதியை பெற்றிருந்தது தெரிந்ததே. (இ-8)

# மட்டக்களப்பில் பழுதான அரிசி விநியோகம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிவாரணமாக பழுதடைந்த அரிசி விநியோகிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் பழுதடைந்த அரிசி வழங்குவதை நிறுத்தும்படி உத்தர விட்டுள்ளார். (இ-3)

# சமூக சேவைப் பகுதிக்கு காசோலை வந்தது; பணமில்லை

சமூக சேவைப் பகுதியால் வழங்கப்படும் உதவித் தொகைக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள 2 கோடி 30 லட்சம் ரூபாவுக்கான காசோலை செயலகத்துக்கு வந்து சேர்ந்தது.

உணவு முத்திரை, மண்ணெண்ணெய் முத்திரை, தர்மப் பணம், நோயாளர்களுக்கான உதவி போன்ற கொடுப்பனவுகளை மேற்கொள்ள வடக்கு - கிழக்கு மாகாணசபையில் இருந்து இந்தக் காசோலை அனுப்பப் பட்டது.

செப்டம்பர் மாதம் வரையிலான கொடுப்பனவுகளுக்குப் போதுமான தொகைக்குரிய காசோலை வந்த போதிலும் வங்கிகளில் பணம் பெறமுடியாததால் கொடுப்பனவுகளைப் பணமாக வழங்க முடியாதுள்ளதாக சமூக சேவைப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரச அதிபர் கொழும்பில் இருந்து பணம் கொண்டு வந்ததும் தர்மப் பணக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் அவர்தெரிவித்தார். (அ-3)

## அரச ஊழியர் காப்புறுதி

அரச ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் என்று விசேட வைத்திய காப்புறுதித் திட்டம் ஒன்றை அமுல் நடத்த அரசு தீர்மானித்துள்ளது

இது தொடர்பான சுற்றறிக்கை சகல அரச திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கும் அனுப்பப் பட்டுள்ளது (இ-எ)

# திருமலையில் சிங்களக் குடியேற்றம் சிவில் நிர்வாகப் போர்வையில்

## மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எச்சரிக்கிறார்

திருமலை மாவட்டத்தில் இராணுவ பயங்கரவாதத்தால் தமிழ் மக்களின் எண்ணிக்கை குறைவடைந்து வரும் இவ்வேளையில், சிவில் நிர்வாகம் என்ற பெயரால் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய சிங்களக் குடியேற்றங்களினால் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் இழப்பைத் தடுக்க அனைத்துத் தமிழ் மக்களும் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ரூபன் தமிழீழ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

திருகோணமலை மாவட்டத்தை முற்றாக சிங்களமயமாக்கும் திட்டத்தை சிறிலங்கா அரசு மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. பலவேறு அழுத்தங்கள் மூலமாகவும், தமிழ் மக்களை திருகோணமலை மாவட்டத்தில் இருந்து வெளியேற்ற தன்னாலான சகல முயற்சிகளையும் சிறிலங்கா அரசு மேற்கொண்டு வருகின்றது. பாரம்பரியமாக இந்த மாவட்டத்தில் வாழ்ந்த தமிழ்மக்கள் இராணுவ பயங்கரவாதத்தினால் அகதிகளாக்கப்பட்டுள்



ரூபன்

ளனர். அகதிகள் நிலையில் வாழும் இந்த மக்களின் மீது தமது இனப்படுகொலையைத் தொடர்வதன் மூலம் அவர்களை அந்த மாவட்டத்தை விட்டே துரத்திவரும் அதே வேளை பிறமாவட்டங்களில் இருந்து சிங்கள மக்களைக் கொண்டு வந்து திருமலையை முழுமையாகச் சிங்களப் பிரதேசமாக்கத் தீவிரப்படுத்தப் படுகின்றன. இதற்கு வசதியாக மேலதிக சிங்கள இராணுவ முகாம்களையும், ஊர்காவற்படை முகாம்களையும் அரசு அமைத்து வருகின்றது. அத்துடன் சிவில் நிர்வாகத்தை அமுல் செய்கிறோம் என்ற பெயரில் மாவட்ட நிர்வாகம் சிங்கள மயப்படுத்தப்படுகின்றது.

சிவில் நிர்வாகத்தை அமுல் நடத்தும் போர்வையில் சிங்களக் குடியேற்றத்தை தீவிரப்படுத்தும் வேளை தமிழ் மக்களின் வீடுகள் புல்டோசரின் துணைகொண்டு அழிக்கப்படுகின்றன. மூதூரில் கட்டைப்பறிச்சான் பகுதியில் மட்டும் 1057 வீடுகள் அழிக்கப்பட்டன. தற்போது கங்குவேலி, புளியடிச்சோலை ஆகிய பாரம்பரிய தமிழ் விவசாயக்கிராமங்களில் இருந்த பாடசாலைகள், ஆலயங்கள் புல்டோசரால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரின் உத்தரவின் பேரில் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்ற இந்த மக்கள் மீண்டும் கிராமத்தில் வாழ முடியாத நிலையைக் கண்டுள்ளனர். இவர்களின் இன்று களில் இருமிநாசினிகள் ஊற்றப்பட்டுள்ளன.

உயிராபத்தின் காரணமாக இடம்பெயர்ந்து சென்றவர்களின் இடத்திற்கு வெளி மாவட்டச் சிங்களவர்களை நியமிப்பதுடன் அவர்களுக்கான குடியேற்றம் என்ற வகையில் புதிய சிங்களக் குடியேற்றங்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

ஏற்கனவே சிறிமாபுர போன்ற பகுதிகளில் சிங்கள மீனவர்கள் குடியேற்றப்பட்டனர். தற்போது மீன்பிடி அமைச்சை திருமலைக்கு மாற்றுவதன் மூலம் கடற்றொழில் உத்தியோகத்தர்கள் என்ற போர்வையில் சிங்கள அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்களுக்காகக் குடியேற்றங்கள் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. 9-11-90 அன்றைய சிறிலங்கா வானொலிச் செய்தியும் இதை உறுதிப்படுத்துகின்றது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருநகரில்

மாவீரர் தினத்தை குருநகரிலும் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

குருநகர் மேற்குப்பகுதி யுத்தத்தால் சேரழிந்து உள்ள போதிலும் குருநகர் கிழக்கு-மேற்கு சிற்றூரவைகள் இதனை கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. (இ 51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

### O/L 90

பகல் நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
நேரம் காலை 8.00 — 1 00 மணி வரை

| | |
|---|---|
| தமிழ் / சமயம் | திரு. பண்டிதர் |
| விஞ்ஞானம் | திரு. இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | திரு. ரவி |
| சமூகக்கல்வி | திரு. வேலா |
| ஆங்கிலம் | திரு. பாலசுப்பிரமணியம் |
| வர்த்தகம் | திரு. நவம் |

90, 91, 92 கலை வர்த்தக விஞ்ஞான வகுப்புக்கள் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறுகின்றன. (14769)



## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

### பிரிவு 2 ஆரம்பம்:-

O/L DAY CLASSES [19-11-90] 8 30 - 1.30
SAT & SUN CLASSES [17-11-90] 8.00 - 1 00
EVENING CLASSES [19-11-90] 2.30 - 5.00

ஆண்டு 10, 9, 8, 7, 6 புதிய பிரிவு 2 ஆரம்பமாகிவிட்டது.

முக்கிய குறிப்பு:- I. கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
II. O/L வகுப்புக்கள் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.

[சி-5419]


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கதிரவேலு சுப்பிரமணியம்

(ஸ்தாபகர்: இராசம். போட்டோர் ஸ்ரோர்ஸ்)

மலர்வு: 15 - 01 - 1927
உதிர்வு: 01 - 12 - 1986
திதி: 17 - 11 - 1990

எங்களுக்கு செல்லாம் வழி காட்டியாக இருந்து அன்பு செலுத்திய உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

12, அந்தபுராண வீதி, சந்தர்மடம், யாழ்ப்பாணம். (14765)

## மழை பெய்த போதிலும் விவசாயநடவடிக்கை இல்லை

நெடுந்தீவு, நவ. 17

தீவுப்பகுதிகளில் பருவ மழை கணிசமான அளவு பெய்துள்ள போதும் நெடுந்தீவில் முன்னர் போல் விவசாய நடவடிக்கைகள் கூடுதலான அளவில் ஆரம்பிக்கப்படவில்லை.

விதை பொருள்களை எடுத்துவருவதில் உள்ள சிரமங்கள், பசளை வகைகளுக்குத் தட்டுப்பாடு ஆகிய வையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (இ-111)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### மருத்துவ பீடம்

பரீட்சை ஆரம்பமாகும் திகதிகள்:

கீழ்க்காணும் பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் நடைபெற உள்ளன:

மருத்துவபீட மூன்றாம் ஆண்டு பரீட்சை (பகுதி - 11) 20 - 12 - 1990
மருத்துவபீட இரண்டாம் ஆண்டு மீள் பரீட்சை 27 - 12 - 1990
மருத்துவபீட மூன்றாம் ஆண்டு மீள் பரீட்சை (பகுதி 1, பகுதி 11) 08 - 04 - 1991

பதிவாளர்,

(சி/5432)



## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

### கலை, வர்த்தக

வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

92 கலை; வர்த்தக
பிரிவு 1 ஆரம்பம்: 17. 11. 90 (காலை 8 மணி)

91 DAY CLASSES
19. 11. 90 (காலை 9 மணி)

90, 91 இற்கான Day Classes Sat, Sun வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முக்கிய குறிப்பு:
i கலை, வர்த்தக வகுப்புக்கள் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
ii மாணவர்கள் முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

[சி/5423]


## கேள்வி அறிவித்தல் - 1991

### வல்வெட்டித்துறை நகர சபை

1990 - 01 - 01 ஆம் திகதி தொடக்கம் 1991 - 12 - 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களுக்கான அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் இணைப் பிரதிகளில் 1990 - 11 - 29 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் நகர சபை அலுவலகத்தில் 1990 - 11 - 28 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணமும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளில் "செயலாளர், நகர சபை, வல்வெட்டித்துறை" என்னும் விலாசத்திற்கு அரக்கு முத்திரை இடப்பட்டு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அதற்கெனப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் குறித்த நேரத்திற்கு முன் சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்குப் பூரண அதிகாரமுண்டு. கேள்வி தொடர்பான நிபந்தனைகளையும், விபரங்களையும் இவ்வலுவலகத்தில், அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### அட்டவணை

| கேள்வி விபரம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை-குத்தகை வல்வெட்டித்துறை | 51, 000/- | 1000/- | 25/- |
| 2. மீன் சந்தை, - குத்தகை வல்வெட்டித்துறை | 61, 000/- | 1000/- | 25/- |
| 3. மாட்டிறைச்சிக் கடை-குத்தகை வல்வெட்டித்துறை | 36, 000/- | 1000/- | 25/- |
| **சேவைகள்:** | | | |
| 1. குப்பை கூழங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரப் பெட்டி வாடகைக்கு வழங்குதல் | | 100/- | 25/- |

வ. இராமச்சந்திரன்,
செயலாளர்,
நகர சபை, வல்வெட்டித்துறை.

நகர சபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
1990 - 11 - 12
நகிவா.

(சி-5415)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 03 - 04 - 1969
விண்ணில்: 17 - 11 - 1987

### சங்கரப்பிள்ளை சத்தியதேவன்

(அப்பன்)

பண்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து எங்களெல்லோரையும் ஆறாத் துயரத்தில் அழுந்தக் கலக்கிவிட்டு மீளாத் துயில் கொண்டாய் மகனே! சூரியன் உதிக்க மறந்தாலும் உன் நினைவை என்றும் மறவோம்.

உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்காமார், தங்கைமார், தம்பி, அத்தான்மார், மாமன், மாமிமார், பேரன், பேத்திமார், மச்சான், மச்சாள்மார்.

மாதகல் வடக்கு,
மாதகல். (14640)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## குவைத் எல்லையில் பயிற்சி

குவைத் எல்லை அருகே அமெரிக்கக் கடற்படை தனது பயிற்சிகளை ஆரம்பித்திருக்கிறது.

இதனை ஓர் ஆத்திர மூட்டும் நடவடிக்கை என்று ஈராக் வன்மையாகக் கண்டித்துள்ளது.

16 போர்க் கப்பல்களில் உள்ள அமெரிக்கக் கடற்படை வீரர்கள் கடந்த வியாழன் சவூதி அரேபியாவின் குவைத் எல்லைப்புறத்தில் தரையிறங்கினர் என்றும்-பயிற்சியில் ஈடுபட்டுள்ள அவர்களுக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட போர் விமானங்கள் பாதுகாப்பு வழங்கி வருகின்றன என்றும் வளைகுடாச் செய்திகள் தெரிவித்தன.

இப்பயிற்சிகளில் சவூதி அரேபியாவின் படைகளும் சேர்ந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து ஆறுதினங்கள் இப்பயிற்சிகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## ஈராக்குக்கு எச்சரிக்கை!

ரபாத், நவ. 17

வளைகுடா நெருக்கடி அபாயகரமாக கட்டத்தை அடைந்துவிட்டதாக ஈராக்குக்கு சோவியத் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

குவைத்தில் இருந்து ஈராக் தனது படைகளை நிபந்தனை இன்றி வெளியேற்றாவிட்டால், யுத்தம் ஒன்று ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகி விடும் என்று சோவியத் அமைச்சர் பெட்ரோவெஸ்கி மொரோக்கோ மன்னர் ஹுசேனைச் சந்தித்துத் தெரிவித்தார்.

வளைகுடா நெருக்கடியில் சமாதானத் தீர்வு காணும் கடைசி முயற்சியாக மொரோக்கோ மன்னர் விசேட அரபு உச்சி மாநாடு ஒன்றை நடத்த அழைப்பு விடுத்திருக்கிறார். (ஒ-எ)

## பாதுகாப்பு: 1 லட்சம் கோடி

இந்தியா தனது பாதுகாப்புச் செலவினத்தை 80 ஆயிரம் கோடி ரூபாவில் இருந்து ஒரு லட்சம் கோடி ரூபாவாக அடுத்த ஆண்டு அதிகரிக்கவிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார். [உ-எ]

## இந்தியர் பதவிக்கு எதிர்ப்பு!

ஐநா, நவ. 17

அகதிகளுக்கான ஐ. நா. ஸ்தானிகராலயத்தின் புதிய ஹைகமிஷனராக இந்தியப் பிரஜை ஒருவரை நியமிப்பதற்கு ஐ. நா. வட்டாரங்களில் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இளவரசர் ஆகாகான் இப்பதவியை வகித்து வந்தார்.

இப்போது புதிய ஹைகமிஷனராக இந்தியர் ஒருவரை ஐ நா. பொதுச் செயலாளர் பெரெஸ்டி குயிலர் சிபார்சு செய்துள்ளார். அவரது பெயர் திரு. வீரேந்திர தயாள்.

மேற்கு நாட்டைச்சேர்ந்த ஒருவரே இப்பதவிக்கு நியமிக்கப்படவேண்டும் என்றும்-அப்போதுதான், அகதிகள் புனர்வாழ்வுக்குத் தேவையான நிதி உதவிகளை, உதவும் நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும்-இந்தியப் பிரஜை ஒருவர் ஹைகமிஷனராக வருவதை எதிர்க்கும் கோஷ்டியினர் கூறி வருகின்றனர்.

உலகிலேயே ஆகக் கூடுதலான அகதிகள் ஆப்கனியர்கள் என்றும்- 30 லட்சம் ஆப்கன் அகதிகள் தற்சமயம் பாகிஸ்தானில் வாழ்ந்து வருகின்றனர் என்றும்-

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே ராஜதந்திர உறவுகள் சீரற்று இருப்பதால் ஹைகமிஷனராக இந்தியர் ஒருவர் நியமனமாவது ஐ. நா. உதவிகளை பாதிக்கும் என்றும் எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர். (இ-எ)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பிதழ்



**சாள்ஸ் எடி நைற்**

(அச்செழு)

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

அமரர் திரு. சாள்ஸ் எடி நைற் அவர்களின் 31-ஆம் நாள் நினைவிற்கான ஸ்தோத்திர வழிபாட்டு ஆராதனை இன்று (17 - 11 - 90) காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கிறது. அதனைத் தொடர்ந்து அங்கு பரிமாறப்படும் ஐக்கிய மதிய போசனத்திலும் பங்குபற்றிச் செல்லுமாறும் உற்றார், உறவினர் யாவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[14782]

# வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரம்: வெளியார் தலையிடக் கூடாது

## வாசுதேவா கூறுகிறார்

கொழும்பு, நவ. 17

வடக்கு - கிழக்கு மாகாணம் இணைந்திருக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை தமிழர்களிடமும் முஸ்லிம்களிடமும் விட்டு விட வேண்டும். வெளி மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் இந்த விஷயத்தில் தலையிடக் கூடாது.

வடக்கு - கிழக்கு நிலைமை பற்றிய நாடாளுமன்ற விவாதத்தின்போது ஐக்கிய சோஷலிச அணி எம். பி வாசுதேவநாணயக்கார மேற்கண்டவாறு கூறினார்.

ஈ பி.ஆர்.எல்.எப் எம். பி சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியதாவது;

தமிழர்கள் ஏன் ஆயுதங்களை தூக்கினார்கள் என்பதை அரசு விளங்கிக்கொள்ள வேண்டும்.

தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் தொடருகின்றன.

முஸ்லிம்களுக்கு தனி மாகாண சபை தேவை என்ற முஸ்லிம் காங்கிரஸ் கோரிய படியால் தான் வடபகுதியில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர் என்று சிலர் சொல்கிறார்கள். அமைச்சர் ரஞ்சனும் இதனை உறுதிப்படுத்துமாற்போல பேசி வருகிறார்.

இப்படி அவர் கூறினார்.

சுதந்திரக்கட்சி எம். பி. நியதபால பேசுகையில் இன்று நாட்டில் வசிக்கும் மக்களில் 15 பேரில் ஒருவர் அகதியாக வாழும் நிலை ஏற்பட்டு உள்ளது'' என்றார். [இ - எ]

# திரு அவதாரத் திருநாள்



**சுவாமி பிரேமானந்தா**

திருஅவதாரம்:

17 11 1951

இலங்கை மலைநாட்டில், சித்திரத்தேரோடும் சிங்கார மாத்தளையில் தங்கத் தமிழ்க் குலத்தில் அவதரித்த ரவி, எங்கள் சுவாமி பிரேமானந்தா, ரவி என்னும் பெயருக்கு ஏற்றாற் போல் இன்று எமது அக இருள் நீக்கி அருள் ஒளி பரப்பி எம்மைக் காத்து இரட்சிக்கிறார்.

தமது தீர்க்க தரிசனத்தினால் துலாபர யுகத்து ஆச்சிரம வாழ்க்கையை வட்டக்குடில்கள் வடிவில் தென் இந்திய பாத்திமா நகரில் அமைத்து, அவரை நாடி தேடிவந்தோரை மட்டுமன்றி மனதால் ஒரு கணம் நினைப்போரையும் தமது அருள் வாக்காலும்; அவரிடமிருந்து வெளிப்படும் ஔஷத திருநீற்றுப் பிரசாதங்களாலும் காண்போர் திகைக்கவும், கேட்போர் வியக்கவும் இந்த நாகரிக யுகத்தில் அமைதியும், அன்பும், பக்தியும் நிலவ அனுக்கிரகிக்கிறார் என்றால் என்னே அவரது திருவருள்,

எமக்கெல்லாம் அன்னையாய், தந்தையாய், ஞான குருவாய் வழிகாட்டி இடர் நீக்கி வரும் சுவாமியின் பிறந்த நாளான இன்று நாமும், நாடும் சுபிட்சம் பெற சுவாமியை நம்பித் துதிப்போமாக!

ஜெய் பிரேம சாந்தி.

-நடராசா குடும்பத்தினர்.

[சி-5438]

# மாவீரர் தின செய்திகள்

## கொடிகாமத்தில்

கொடிகாமம், நவ. 17

மாவீரர் தினத்தை முன்னிட்டு கொடிகாமம் பகுதியில் எழுச்சி யாத்திரை மேற்கொள்ளப்பட்டது.

எழுச்சி யாத்திரையின் குறிக்கோள்கள் கவிதை மூலமும் பேச்சுக்கள் மூலமும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. [இ-75]

## பாடசாலைகளில்

மானிப்பாய், நவ. 17

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் இம் மாதம் 21 ஆம் திகதியில் இருந்து 27 ஆம் திகதிவரை மாவீரர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

மாவீரர் வாரத்தில் பாடசாலைகளில் பல முக்கிய வைபவங்கள் இடம்பெறவுள்ளன. ஆசிரியர்கள் வேட்டி, வெள்ளை ஷேர்ட், ஆசிரியைகள் சிவப்பு அல்லது மஞ்சள் நிறச்சேலை, மாணவர்கள் சீருடை தரித்து வைபவங்களில் கலந்த கொள்வர். (இ-90)

## கொழும்புத்துறையில்

கொழும்புத்துறை, நவ. 17

மாவீரர் தினத்தை ஒட்டி கொழும்புத்துறை கிழக்கு துறைமுகச் சந்தி, மணிப்புரிச் சந்தி, துண்டிச் சந்தி ஆகிய இடங்களில் பிரமாண்டமான பந்தல்களும், துறைமுகச் சந்தியில் தூபியும் நிறுவப்பட்டு வருகின்றன. [இ-30]

## லட்சியப் பாதை

ஒட்டுசுட்டான், நவ. 17

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாச்சாரப் பிரிவினால் 'லட்சியப் பாதை' என்னும் சமூக நாடகம் மாவீரர் தினமாகிய 27 ஆம் திகதி அரங்கேற்றப்படவுள்ளது- (இ-113)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**சோ. க. இரவீந்திரன்**

அவர்கள்

ஆசிரியர் யா/வைத்தீஸ்வர வித்தியாலயம்)

அன்னை மடியில்:

24 - 07 - 1947

அரக்கர் அழிப்பில்:

20 - 08 - 1990

எம் செல்வமே!

உயிர்க்குயிரே!!

நெஞ்சம் உமக்கிடமாக வைத்தோம்

நினையாதொரு பொழுதும் இருந்தறியோம்.

உமது ஆன்மா சாந்தி பெற நிதமும் இறைவனைப் பிரார்த்திக்கும்

மனைவி, மக்கள், பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

முதலாம் வட்டாரம், வேலணை கிழக்கு.

(14781)

# அறிவித்தல்

**யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்ற ஆயுள்வேத வைத்திய உத்தியோகத்தர்களுக்கும்**

19 - 11 - 1990ம் திகதி காலை 11 - 00 மணிக்குக் கொக்குவில் உப அலுவலகத்தில் என்னால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஒரு முக்கிய கலந்துரையாடலில் தவறாது பங்கு கொள்ளும் வண்ணம் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுள்வேத வைத்திய உத்தியோகத்தர்களையும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சு. டிவகலாலா,

பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
90 - 11 - 16.

(சி/5437)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ராகிங்" சம்பவங்களை சகிக்க முடியாது - உபவேந்தர்

யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புதிய மாணவர்கள்மீது உள ரீதியாகவோ, உடல் ரீதியாகவோ இம்சைப்படுத்தும் சிரேஷ்ட மாணவர்கள் உடனடியாக பல்கலைக்கழகத்தைவிட்டு இடைநிறுத்தி வைக்கப்படுவர்.

''ராகிங்'' கை சகிக்கவும் முடியாது; மன்னிக்கவும் முடியாது.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா இவ்வாறு அறிவித்துள்ளார்.

புதிய மாணவர்கள் மீது ''ராகிங்'' சம்பவங்கள் சில சிறிய அளவில் நடைபெற்றதாக கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே உபவேந்தர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

உபவேந்தர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பல்கலைக்கழகத்தின் பெயரை களங்கப்படுத்தும் விதத்தில் ஒரு சில சிரேஷ்ட மாணவர்கள் நடந்துகொண்டதை அறிந்த நான் வேதனையடைகிறேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

### ஒட்டுசுட்டானில்

தமிழீழ மாவீரர் தினத்தையொட்டி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் சிரமதானப் பணி நடைபெறுகிறது (இ-113)

# மிதி வெடிக்கு கல் எறிந்தவர் காயம்!

குருநகர், நவ. 17

மிதிவெடியை நோக்கி கல்லால் எறிந்தபோது அது பலத்த சத்தத்துடன் வெடித்தது. அப்போது கல் எறிந்தவர் காயமடைந்தார்.

முகம் மற்றும் கைகளில் காயமடைந்த குருநகரைச் சேர்ந்த ஸ்ரனிஸ்லோஸ் (35 வயது) தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பச்சை நிறத்தில் தெரிந்த ஒரு பொருளில் சந்தேகம் கொண்டே தாம் கல்லால் எறிந்து பார்த்ததாக காயமடைந்தவர் தெரிவித்தார். (ஒ-51)

# ஆஸ்பத்திரிக்கு டீசல் உதவி

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவைப்பட்ட டீசலில் ஒரு குறிப்பிட்ட அளவை ஹட்டன் நாஷனல் வங்கி நேற்று முன்தினம் வழங்கி உதவியது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சைப் பிரிவு உட்பட பல அத்தியாவசிய சேவைகளில் தடங்கல் ஏற்படும் நிலை இருந்தது.

இந்த நிலையில் ஹட்டன் நாஷனல் வங்கி ஊழியர்கள் எரிபொருளை வழங்கி உதவினர். (ஒ-15)

# சர்வதேச நீதிபதியாக இலங்கையர்

கொழும்பு, நவ. 17

சர்வதேச நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராக இலங்கையைச் சேர்ந்த முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சி. ஜி வீரமந்திரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது ஓர் ஐக்கிய நாடுகள் சபை நிறுவனமாகும். இந்தியாவைச் சேர்ந்த ஒருவரின் பதவிக் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து திரு. வீரமந்திரி தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப் பதவிக்கு இலங்கை முன்னர் நான்கு தடவைகள் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது. (அ-எ)

# சிரமதானம்

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்றும் நாளையும் சிரமதான வேலைகள் செய்யப்பட உள்ளன

கல்லூரி அபிவிருத்திச் சங்க அனுசரணையுடன் நடைபெறும் சிரமதான வேலைகளில் சங்க முகாமைக்குழு உறுப்பினர்களும் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். (அ)

### நம்பிக்கை .-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னார்.

விவாதத்தின் ஆரம்பத்தில் சபையில் பெரும் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

ஏழரை மணித்தியாலம் நடைபெற்ற விவாதத்தின் முடிவில் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இந்திரா காங்கிரஸ் கூட்டணி, சந்திரசேகரின் ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தது. [உ]

### பருத்தித்துறை ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் அரசுக்கு சிபார்சு செய்திருப்பதாகவும் அறிய வருகிறது.

அதைத் தொடர்ந்தே புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகத் [illegible] (ஒ-3)

# தபால்கள், முத்திரைகள் நாளை வரும் கப்பலில்

நாளை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'விங்கோ றேட்ஸ்' கப்பலில் உணவுப் பொருள்களுடன் தபால் பொதிகள், முத்திரைகள் என்பனவும் கொண்டுவரப்பட உள்ளதாக அறிய வருகிறது.

இதேவேளை —

யாழ். போதனா ஆஸ்பத்திரியின் பாதுகாப்புப் பகுதி எல்லைகளைக் குறிக்கும் அடையாள விளக்குகளைப் பொருத்துவதற்குத் தேவையான மின்சார உபகரணங்களும் இந்தக் கப்பலில் வந்து சேரவுள்ளன. [ஒ 3]

# சம்பளம், ஓய்வூதியத்துக்கு பணம் வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சில திணைக்கள ஊழியர்களின் சம்பளத்தை வழங்கவும், ஓய்வூதியக்காரருக்கான கொடுப்பனவுகளை வழங்கவும் பணம் வந்து சேர்ந்துள்ளது.

யாழ் - செயலகம், சுகாதாரத் திணைக்களம், யாழ்- போதனா வைத்தியசாலை ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்களுக்கான சம்பளத்தை வழங்குவதற்கும்-

ஓய்வூதியக்காரர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கவும்-

இலங்கை வங்கிக்கு உரிய கொடுப்பனவுகளுக்கும்-

தேவையான குறிப்பிட்ட தொகை கொழும்பிலிருந்து நேற்றுப் பருத்தித்துறை வந்து சேர்ந்த கப்பலில் கொண்டு வரப்பட்டுள்ளது (அ-3)

# தளபதியின் குற்றச்சாட்டை மறுக்கிறார் கருணாநிதி

சென்னை, நவ 17

பல்வேறு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு தமிழகப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இலங்கைத் தமிழ்ப் போராளிகளைத் தமிழக அரசு விடுதலை செய்துவிட்டது என்று இந்திய கடற்படைத் தளபதி ராம்தாஸ் தெரிவித்த குற்றச்சாட்டு உள்நோக்கம் கொண்டது.

முதலமைச்சர் கருணாநிதி நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அரசு அதிகாரி ஒருவர் இப்படி ஒரு அரசின்மீது குற்றம் கூறலாகாது என்றும் அவர் சொன்னார்.

ஒப்படைக்கப்பட்ட இலங்கைத்தமிழர்மீது விசாரணை நடத்தப்பட்டு, அவர்கள் குற்றவாளிகள் அல்லர் என்று காணப்பட்ட பின்னரே விடுதலை செய்யப்பட்டார்கள் என்றும் முதலமைச்சர் கூறினார். (உ-எ)

### நீர்வேலியில்

மாவீரர் தினத்தை ஒட்டி நீர்வேலிப்பகுதியில் பல சிரமதானவேலைகள் நடைபெற்று வருகின்றன.

# மரண அறிவித்தல்கள்

## வீரவேங்கை பராசக்தி (செல்வி மகேந்திரன் மாலினிதேவி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சாவகச்சேரி சங்கத்தானையில் வசித்தவருமாகிய வீரவேங்கை பராசக்தி (மகேந்திரன் மாலினிதேவி) 14 - 11 - 90 ல் வீரமரணம் அடைந்தார். அன்னார் அருந்ததியின் அன்பு மகளும், மயூரநாதன் கணேசானந்தனின் அன்புச் சகோதரியும், குமரேசு நல்லம்மாவின் அன்புப் பேத்தியும், பொன்னம்பலம் தனபாலசிங்கம் சாவித்திரி (பிரான்ஸ்), சங்கர் நளாயினி, சந்திரமதி(இந்தியா), கோசலையின் அன்புப்பெறாமகளும், தங்கராசா, ஜெகதாம்பாள் (பிரான்ஸ்), தியாகராசா, சியாமளாவின் (பிரான்ஸ்) அன்பு மருமகளும், சேமாநந்தா, சுதன், கார்த்திகா, ரமணன், டக்ஷனின் உடன் பிறவாச் சகோதரியும், பிரான்ஸில் உள்ள சஜன், சஜனி, சஜமுகன், சரண்யாவின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-11-90 நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
அருந்ததி பொன்னம்பலம்.
[தாயார்]

(14786)

## திருமதி வேலுப்பிள்ளை சிந்தாமணி

ஆனைப்பந்தியை பிறப்பிடமாகக் கொண்டவரும், 165, கஸ்தூரியார் வீதி இல்லத்தில் வசித்தவருமாகிய திருமதி வேலுப்பிள்ளை சிந்தாமணி அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று [17-11-90] சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனகிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. வே சிவகுருநாதன்
165, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். [14651]

## சதாசிவம் இராசரத்தினம் (ராஜ்) (சக்கடத்தார்)

அச்சுவேலியை வசிப்பிடமாகவும் பிறப்பிடமாக கொண்டவருமாகிய சதாசிவம் இராசரத்தினம் 16 - 11 - 90 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார். அன்னார் திரு திருமதி சதாசிவம் தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும், லோகேஸ்வரியின் அன்புக்கணவரும், சந்திரவதனி (பாத்திமா), வசீகரன், ஸ்ரீதரன் (பிரான்ஸ்), பிரவாகினி ஆகியோரின் அன்புத்தந்தையும், காதர்நசீம் (பிரான்ஸ்), மல்லிகா, லுசீனா, செல்வரஜனி, தியாகராஜா ஆகியோரின் அன்பு மாமனும், நிரோஷன், ரவிக்குமரன், ஸ்ரீமதி, றதீபன், மேனகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16 - 11 - 90 ல் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லுசீனா ஸ்ரீதரன்
அச்சுவேலி. (11300)

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு இராசரட்ணம் (Retired Shroff)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு இராசரட்ணம் அவர்கள் 16-11-1990இல் காலமானார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்மநாதன் [முன்பு B.C.C இல் கடமையாற்றியவர்], சண்முகநாதன் [மத்திய வங்கி ஓய்வு பெற்ற சிறாப்பர்], இராஜேந்திரம் [ஓய்வுபெற்ற பிரதேச முகாமையாளர் இ.போ.ச., அமெரிக்கா], வின்னராசா [ஓய்வுபெற்ற பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர்], விஜயநாதன் [கொழும்பு], மகேந்திரன் [மேற்குஜேர்மனி], இந்திராதேவி, வசந்தாதேவி [அமெரிக்கா] ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, கனகம்மா, பரமேஸ்வரி [அமெரிக்கா], காலஞ்சென்ற விஜயலக்ஷ்மி, டொறின் [அமெரிக்கா], கமலா [ஜேர்மனி], தனபாலசிங்கம் [ஓய்வுபெற்ற R M P], பேரின்பநாதன் [O.T.C இல் கடமையாற்றியவர், அமெரிக்கா] ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை [17-11-1990] அச்சுவேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் அச்சுவேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ. தனபாலசிங்கம்
179/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (14788)

## பொன்னையா முத்துச்சாமிப்பிள்ளை

பொன்னையா முத்துச்சாமிப்பிள்ளை நேற்று சங்கானையில் காலமானார். இவர் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், சச்சிதானந்தம், சிவானந்தம், தில்லைநாதன், சுத்தானந்தம், குணரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திராம்பாள், குமராம்பிகை, கௌரி, ஜெனி, ஜெயலெட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. சச்சிதானந்தம்
'பத்மனகம்',
சங்கானை. [14622]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org